Registered as a Newspaper   பக்கங்கள் 04   விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM   Peoples Daily   மக்கள் தினசரி

நாதம் 04   திருவள்ளுவர் ஆண்டு 2024   ஆடி 25   [ 09-08-1993 ]   திங்கட்கிழமை   ஓசை 172

பொது நூலகம்
மாநகராட்சி மன்றம்
-9-8-1993
யாழ்ப்பாணம்

## இலங்கை - இந்திய கப்பல் போக்குவரத்து அரசாங்க மட்டத்தில் ஆராய்வு

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான கப்பல் போக்குவரத்து சேவையை விரிவு படுத்துவது தொடர்பாக இலங்கை-இந்திய அரசாங்க மட்டங்களில் ஆராயப் பட்டு வருவதாக கூறப்படுகின்றது. இது தொடர்பாக இந்தியக் கப்பல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ராதாகிருஷ்ணன் அண்மையில் கொழும்புக்கு விஜயம் ஒன்றை மேற் கொண்டு துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்துதுறை அமைச்சர் எம். ஈ. எச். மஹ்ரூபுடன் பேச்சுவார்த்தைகளும் நடத்தியுள்ளார்.

# ஐ. நா. மத்தியஸ்தத்தின் கீழ் தீர்வு திட்டம்; சிறிலங்கா அரசாங்கத்தால் நிராகரிப்பு

## நோபல் பரிசு பெற்றோர் யோசனை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானதாம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மத்தியஸ்தத்தின் கீழ் தமிழர் பிரதேசங்களுக்கு தன்னாட்சி வழங்கும் சமஷ்டி முறையுடன் கூடிய இனப்பிரச்சினைக்கான சமாதான தீர்வுத் திட்டத்தை சிறிலங்கா அரசாங்கம் நிராகரித்துள்ளது. உலகளாவிய ஒத்துழைப்பிற்கான உலக அமைப்பு என்னும் கனடாவிலுள்ள இவ் அமைப்பைச் சேர்ந்த நான்கு நோபல் பரிசு பெற்றவர்கள் தயாரித்த இத் திட்டம் விடுதலைப் புலிகளுக்குச் சார்பானது எனவும் சிறிலங்கா அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நோபல் பரிசு பெற்றவர்களான அமெரிக்காவைச் சேர்ந்த ஜோர்க் வேர்ல்ட், அயர்லாந்தைச் சேர்ந்த செல்வி மேரிட் பக்குவாயர், பெல்ஜியத்தைச் சேர்ந்த பேராசிரியர் இலியாபேர்குசின், நெதர்லாந்தைச் சேர்ந்த பேராசிரியர் ரின்பேகன் ஆகியோரே இத் தீர்வுத் திட்டத்தை தயாரித்தவர்கள் ஆவர்.

இத்தீர்வுத் திட்டம் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் தமிழர் தரப்பில் விடுதலைப் புலிகளுக்கும் மட்டுமே அனுப்பி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் ஐ. நா. சபையின் மத்தியஸ்தத்துடன் தமிழர்பிரதேசத்திற்கு தன்னாட்சி வழங்கும் சமஷ்டி முறையிலான ஆட்சி அமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனவும் விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க ஐ நா. துருப்புக்கள் இலங்கைக்கு அழைக்கப்பட வேண்டும் எனவும் இத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் முதற் கட்டமாக ஐ. நா. வை இனப் பிரச்சினை விடயத்தில் தலையிடுமாறு சிறிலங்கா அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் அதன் செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ்காலியிடம் கோரவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்பின்னர் முதலில் ஐ. நா. பிரதிநிதி ஒருவரை அனுப்பி பிரச்சினையை ஆராய வேண்டும் எனவும், பின்னர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி, தளபதிகளுக்கு யுத்தக் கைதிகள் கடிதம்

சாகும் வரை உண்ணாவிரதமிருக்கும் சிங்கள யுத்தக்கைதிகள் தம்மை விடுவிக்கக்கோரி அரசுக்கு மீண்டும் கடிதம் அனுப்பவுள்ளனர். சிங்கள யுத்தக் கைதிகளதும் அவர்களது உறவினர்களதும் கடிதங்களை விரைவில் கொழும்பு செல்ல இருக்கும் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் எடுத்துச் சென்று அரச தரப்பிடம் நேரடியாக கையளிப்பார் என்று தெரிய வருகிறது.

ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்கா கூட்டுப்படைத் தளகர்த்தா திரு. ஹமில்டன் வணசிங்கா, பொலிஸ்மா அதிபர் ஏர்ணஸ்ட் பெரேரா ஆகியோருக்கு தனித்தனியான கடிதங்கள் அனுப்பி வைக்கப் படவுள்ளன.

கைதிகளது உடல், உள நிலைமைகளை விளக்கியும், கைதிகளை விடுவிப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் இக்கடிதங்களில் அரச தரப்பிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. [சி]

## விடுவிக்கப்படாவிட்டால் நோயாளியாகி விடுவோம்

### போர்க்கைதிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"எமது உடல்நிலை நாளுக்குநாள் மோசமடைந்து வருகிறது. அரசு எம்மை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் காலம் கடத்தி வருகிறது. இவ்வாறு தொடர்ந்தும் எம்மை விடுவிப்பதில் அரசு அக்கறை செலுத்தாமல் இருந்தால் நாம் யுத்தக் கைதிகளாக மட்டுமல்லாமல், தீராத நோயாளிகளாகவும் மாறி விடும் சூழ்நிலை உருவாகி வருகிறது."

இவ்வாறு இன்றுடன் பன்னிரண்டாவது நாளாக உண்ணாவிரதப் போராட்டம் நடாத்திவரும் சிங்கள யுத்தக் கைதிகள் நேற்று மாலை எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சியாக உண்ணாவிரதமிருந்துவரும் இந்த யுத்

( 4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் புலிகள் அதிரடி 6 பொலிசார் பலி ஆயுதங்கள் மீட்பு

(திருமலை)

ஒன்றை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் மாலை

பறிப்பட்ட ஆயுத விபரம்

கம் தெரிவித்துள்ளது.

நோபல் பரிசு பெற்றவர்களான அமெரிக்காவைச் சேர்ந்த ஜோர்க் வேர்ல்ட், அயர்லாந்தைச் சேர்ந்த செல்வி மேரிட் பக்குவாயர், பெல்ஜியத்தைச் சேர்ந்த பேராசிரியர் இலியாபேர்குசின், நெதர்லாந்தைச் சேர்ந்த பேராசிரியர் ரின்பேகன் ஆகியோரே இத்தீர்வுத் திட்டத்தை தயாரித்தவர்கள் ஆவர்.

இத்தீர்வுத் திட்டம் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் தமிழர் தரப்பில் விடுதலைப் புலிகளுக்கும் மட்டுமே அனுப்பி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் ஐ நா. சபையின் மத்தியஸ்தத்துடன் தமிழர்பிரதேசத்திற்கு தன்னாட்சி வழங்கும் சமஷ்டி முறையிலான ஆட்சி அமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனவும் விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க ஐ நா. துருப்புக்கள் இலங்கைக்கு அழைக்கப்பட வேண்டும் எனவும் இத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் முதற்கட்டமாக ஐ. நா. வை இனப்பிரச்சினை விடயத்தில் தலையிடுமாறு சிறிலங்கா அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் அதன் செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ்காலியிடம் கோரவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்பின்னர் முதலில் ஐ நா. பிரதிநிதி ஒருவரை அனுப்பி பிரச்சினையை ஆராய வேண்டும் எனவும், பின்னர்

(4ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் புலிகள் அதிரடி 6 பொலிசார் பலி ஆயுதங்கள் மீட்பு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் காவலரணில் காவல் காக்க வந்த சிறிலங்கா பொலிசார் மீது விடுதலைப்புலிகள் துணிகர அதிரடித்தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். புலிகளின் அதிரடியால் 6 பொலிசார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன் இவர்களது ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர்.

நேற்று முன்தினம் மாலை 4-15 மணியளவில் திருமலை நகரிலிருந்து 5 மைல் தொலைவில் உள்ள சாம்பல்தீவு எனுமிடத்தில் அமைந்துள்ள மாங்கனாய் பொலிஸ் நிலையத்திலிருந்து 500 யார் தொலைவில் உள்ள பாலத்தடி காவலரணிற்கு காவல்காக்க வந்த பொலிசார் மீதே விடுதலைப் புலிகள் இவ் வெற்றிகரத் தாக்குதலை நடத்தினர் இத் தாக்குதலின்போது 6 சிறிலங்காப் பொலிசார் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ் வெற்றிகர தாக்குதலில் பொலிசாரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுத விபரம் வருமாறு.

★ ரி 56-1 ரக துப்பாகிகள்-05
★ இதன் ரவைக்கூடுகள் -17
★ ஏ. கே. கோல்சர் -04
★ ஜே.ஆர்.ரக கைக்குண்டு-04
★ நடுத்தர ரவைகள் -440
★ வானொலிப் பெட்டி (சிறிது) -01

## சாம்பல்தீவுப் பகுதியில் மூன்று பெண்கள் கைது

(திருமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் கிராமம் ஒன்றை திடீரெனச் சுற்றிவளைத்த சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் ஓர் ஆசிரியை உட்பட மூன்று பெண்களைக் கைது செய்து வாகனத்தில் ஏற்றிச்சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த 5ஆம் திகதி நண்பகல் 12 மணியளவில் திருக்கோணமலையில் சாம்பல்தீவு

(4ஆம் பக்கம் பார்க்க)

## சட்டத்தரணிகள் சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ நீதிமன்றங்களில் சட்டத் தொழில் புரிவதற்கு விரும்பும் சட்டத்தரணிகள்

( 4 ஆம் பக்கம் பார்க்க)

இந்து தீவிர அமைப்பு

# ஆர். எஸ். எஸ். அலுவலகம் குண்டு வெடிப்பில் தகர்ப்பு

## 9 பேர் பலி; பலர் படுகாயம்

(சென்னை)

இந்துமத தீவிரவாத அமைப்பான ஆர். எஸ் எஸ். அமைப்பின் சென்னை தலைமை அலுவலகத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற பெரும் குண்டு வெடிப்பில் 9 பேர் பலியாகினர். பலர் காயமடைந்தனர். இரண்டு மாடி அலுவலகக் கட்டடம் பலத்த சேதத்திற்குள்ளானது. குண்டு வெடிப்பிற்கான காரணம் ஏதும் தெளிவுபடுத்தப்படவில்லை.

சென்னை சட்டன்ஸ் வீதியில் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதியில் அமைந்திருந்த ஆர் எஸ் எஸ் அமைப்பின் இரண்டு மாடி கட்டடத்தில் நேற்று பிற்பக 1.45 மணிக்கு பெரும் குண்டு ஒன்று வெடித்தது. கொல்லப்பட்டவர்களில் அநேகர் குண்டு வெடித்தபோது அலுவலகத்தின் நூல் நிலையத்தில் இருந்தனர் எனக் கூறப்படுகிறது.

பொலிசார், தீயணைப்பு படையினர், வெடிகுண்டு நிபுணர்கள் தற்போது பலத்த சேதமடைந்த அக்கட்டடத்தை பரிசோதித்து வருகின்றனர். குண்டு வெடிப்பு சம்பவத்தையடுத்து தமிழ்நாடெங்கும் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. மத வன்முறை வெடிக்கக் கூடிய இடங்களில் மத்திய ரிசேர்வ் பொலிஸ் ஈடுபட்டுள்ளது.

இதே வேளை இக் குண்டு வெடிப்பிற்கு ஐ எஸ்.எஸ் எனப்படும் இஸ்லாமிய மத அமைப்பே காரணம் என ஆர்.எஸ்.எஸ் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

## புலிகளுடன் தொடர்புள்ள தீவிரவாதிகள் செயலாம்

(சென்னை)

விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ள தீவிரவாதிகளே சென்னைக் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்குக் காரணம் என்று தான் சந்தேகிப்பதாகத் தமிழ்நாடுஆர் எஸ்.எஸ். தலைவர் ரங்கசாமி தேவர் தெரிவித்துள்ளார்.

சென்னையில் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## வீரச்சாவு



2-ம் லெப். எழில்ராஜ்



2-ம் லெப். நாகராசா

சுகயீனம் காரணமாக யாழ்ப்பாணத்தில் கடந்த 6-ம் திகதி விடுதலைப் புலி போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த 2-ம் லெப்டினன்ட் எழில்ராஜ் (கணபதிப்பிள்ளை குமணதாசன்-பிரதான வீதி. திருக்கோவில் அம்பாறை) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

ஆனையிறவில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினருடன் இடம்பெற்ற எதிர்பாராத மோதல் ஒன்றில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவடைந்த 2-ம் லெப்டினன்ட் நாகராசா (அழகுவேல் ரவிச்சந்திரன், 154-ம் கட்டை கருணாகடை கிளிநொச்சி) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

உறவினர்களிடமும் கடிதங்களை விரைவில் கொழும்பு செல்ல இருக்கும் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் ... திரு. ஹமில்டன் வணசிங்கா, பொலிஸ்மா அதிபர் ஏர்ணஸ்ட் பெரேரா ஆகியோருக்கு தனித்தனியான ... இக்கடிதங்களில் அரச தரப்பிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. [சி]

# விடுவிக்கப்படாவிட்டால் நோயாளியாகி விடுவோம்

## போர்க்கைதிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"எமது உடல்நிலை நாளுக்குநாள் மோசமடைந்து வருகிறது. அரசு எம்மை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் காலம் கடத்திவருகிறது. இவ்வாறு தொடர்ந்தும் எம்மை விடுவிப்பதில் அரசு அக்கறை செலுத்தாமல் இருந்தால் நாம் யுத்தக் கைதிகளாக மட்டுமல்லாமல், தீராத நோயாளிகளாகவும் மாறிவிடும் சூழ்நிலை உருவாகி வருகிறது."

இவ்வாறு இன்றுடன் பன்னிரண்டாவது நாளாக உண்ணாவிரதப் போராட்டம் நடாத்திவரும் சிங்கள யுத்தக் கைதிகள் நேற்று மாலை எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சியாக உண்ணாவிரதமிருந்துவரும் இந்த யுத்

( 4 ஆம் பக்கம் பார்க்க)

# அப்பாவி போர்க்கைதிகளை விடுதலை செய்யவேண்டும்

## - ஜெனரல் ஹமில்டன் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தம்மை ஒரு விடுதலை இயக்கம் என்று கூறுகின்றனர். உண்ணாவிரதம் இருக்கும் அப்பாவி போர்க் கைதிகளை அவர்கள் விடுதலை செய்ய வேண்டும் என கூட்டுப்படை தலைமையகத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதமிருக்கும் போர்க் கைதிகள் தொடர்பாக கருத்து வெளியிட்டபோதே ஜெனரல் ஹமில்டன் மேற்கண்டவாறு தெரிவித்தார். கைதிகளை விடுதலை செய்வதன் மூலம் புலிகள் தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த அவர்கள் முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## கைதிகளின் பெற்றோர் கொழும்பு திரும்புகின்றனர்

(யாழ்ப்பாணம்)

தற்போது உண்ணாவிரதமிருந்து வரும் போர்க் கைதியான நந்தன சமன்சிறியின் பெற்றோர்கள் இன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் கொழும்பு திரும்புகின்றனர்.

நந்தன என்ற போர் கைதியின் தாயாருக்குசத்திரசிகிச்சை ஒன்றை மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால் இவர்கள் கொழும்பு செல்கின்றனர். இவர்கள் கொழும்பில் தம் பிள்ளைகள் விடுவிப்பு தொடர்பாக அரசிற்கு அழுத்தம் கொடுக்கவுள்ளதாக தெரிவித்தனர்.

## அலுவலர் பயண அனுமதி செயலகம் இடமாற்றம்

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் முத்திரைச்சந்தியில் இயங்கி வந்த போக்குவரத்து கண்காணிப்பு பிரிவின் அலுவலர்க்கான வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான பயண அனுமதி வழங்கும்

( 4 ஆம் பக்கம் பார்க்க)

## 'விடுதலைப் புலிகள்' ஏடு நாளை வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' இதழின் குரல் - 41 ஏடு நாளை வெளிவருகின்றது.

"யுத்தமா? சமாதானமா? விஜேதுங்கா அரசு தடுமாறுகின்றது" என்ற தலைப்புச் செய்தியுடன் வெளிவரும் இவ் இதழின் 'புலிகளின் குரல்' பகுதியில் 'இதயபூமி 1' என்ற

[ 4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### ஸ்ரீகாந்த்புத்தகசாலை

இந்திய நாவல்கள், டிக்செனெறிகள், இலங்கை வெளியீடுகள் ஆங்கில தமிழ் சொற்களஞ்சியம், மற்றாஸ் டிக்செனெறி) சீவம் இன்டஸ்றீஸ் வெளியீடுகளும், அருள் உரை ஆகியவை. நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ காந்தி புத்தகசாலை நல்லூர்
(சி-7134)

### English Classes

புதிய வகுப்புக்கள் 09 08 1993 இன்று காலை 9 00 மணிக்கு ஆரம்பமாகின்றன. கிழமை நாட்களிலும், வார இறுதி நாட்களிலும் தொடர்புகட்கு: K சபாநாயகம், 4, பிள்ளையார் ஒழுங்கை, திருநெல்வேலி
(சி-7164)

### றேடியோ, மணிக்கூடுகளின் சேவிஸ் கட்டணங்கள்

வண்டிங்கடிகாரங்கள் 90/- ஓட்டோமெற்றிக் கடிகாரங்கள் 125/- எலெக்ரோனிக் கடிகாரங்கள் 90/-, 150/-மேசை சுவர்மணிக்கூடுகள் 100 - 200 றேடியோமட்டும் 150/- கசற் றேடியோ— 200/- இவை யாவும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.
(சி/7113)

### சலனம்

சென்னை பிலிம்சொஸைட்டி வெளியிடும் உலக சினிமா தரம் பற்றிய இருமாத சினிமா இதழ் கிடைக்குமிடம்: வசந்தம் புத்தக நிலையம், 405 அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (5592)

### தவறிவிட்டது

ஸ்ரீ ரங்கநாதன் விக்னேஸ்வரி, 553 கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்பவருடைய பேர்ஸ் ஒன்று அடையாள அட்டை, பாஸ், ஒரு தொகைப் பணத்துடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
[5643]

### விற்பனைக்கு

எம்மிடம் கடைப் பாவனைக்குரிய கண்ணாடி ஷோகே...

# பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் மட்டக்களப்பில் அவதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கோட்டக் கல்விப் பிரிவில் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் கோட்டக் கல்வி அலுவலகத்தினால் மாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பப்படாமையால் அவர்கள் நியமனம் பெறமுடியாத நிலைக்கு உள்ளாகியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

சகல பிரிவினருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளபோதும் மட்டக்களப்பு பிரிவிலுள்ள ஆசிரியர்களுக்கு இன்னமும் நியமனம் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டபோது "நான் என்ன செய்வது எழுதுவினைஞர் அவற்றை அனுப்பத் தவறிவிட்டார்" என்று பதில் அறிவித்தாராம். விண்ணப்பங்களைத் தேடிப் பார்த்தபோது பலரின் விண்ணப்பங்கள் அங்கு காணப்படவில்லையாம்.

மட்டக்களப்பு கல்வித்திணைக்களத்தின் இப்போக்கு குறித்து ஆசிரியர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

திடீரென ரசம் அருந்த வேண்டும் அல்லது உணவுடன் கலந்து உணணவேண்டும் எனத் தோனறுகிறதா?

அரைக்கத் தேவையிலலை, கொதிக்கத் தேவையில்லை.

இதோ

"ஒரு நிமிடத்தில் சுவைமிகு ரசம்"

தயார்

ஆச்சரியமாக உள்ளதா?

ஆம்

Tasty!

புதிய அறிமுகம்

'திடீர் ரசம்'

(INSTANT RASAM)

[இரசாயன சேர்க்கைகள் அற்றது]

1 தேக்கரண்டி திடீர் ரசக்கிறீமை 1 டம்ளர் சுடுநீரில் கலக்கும்போது சுவையான ரசம் உங்களுக்குக் கிடைக்கும்.


100 கிராம் பொதியின் விலை ரூ. 17/50 மட்டுமே.

இன்றே உங்கள் வியாபாரியிடம் கேட்டு வாங்கிப் பாவியுங்கள்.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(சி-7157)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



# யுத்தம் நடக்கும் இவ்வேளை கிரிக்கெட் ரசிப்பது எவ்வாறு?

-கண்டி மாநகரசபையில் கேள்வி

புலிகள் மணலாற்றில் இராணுவத்தினரைக் கொன்று பல லட்சம் பெறுமதியான ஆயுதங்களை அள்ளிச் சென்றுள்ளார்கள். நாட்டில் யுத்தம் நடக்கும் இந்த வேளையில் மக்கள் எவ்வாறு கிரிக்கெட் ஆட்டங்களைப் பார்த்துக் கைகொட்டலாம். இவ்வாறு கண்டி மாநகர சபைக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் கே. ஏ. விலபேட் பேசினார்.

தேசிய அழிவு நடந்து கொண்டிருக்கும் காலத்தில் மக்களைக் கேளிக்கைகளில் ஈடுகொள்ளச் செய்வதன் மூலம் மூளைச் சலவை செய்வது நாட்டுக்கே பெரும் சாபம் என்றார் அவர்.

கிரிக்கெட்டும் நாட்டுக்குத் தேவைதான். இது அந்தக் கேளிக்கைக்குரிய நேரகாலமல்ல. ஒரு பக்கத்தில் யுத்தமும் மறுபுறத்தில் பொருளாதாரச் சீர்குலைவும் நடந்து கொண்டிருக்கின்றன. வாழ்க்கைச் செலவு உயர்வை மக்கள் சமாளிக்க முடியாது இருக்கிறார்கள். அரச உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் வேலைத்தலங்களில் மணித்தியாலக்கணக்கில் கிரிக்கட் பார்க்கிறார்கள். கைகொட்டுவதும் கிரிக்கெட் ஆடுவதும் தேசத்தின் பேராபத்துக்குத் தீர்வாகாது இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

## பதவி வெற்றிடம்

ஆங்கில மருந்து வாணிபத்தில் அனுபவம் உடையவர்களிடமிருந்து விற்பனையாளர்கள், விற்பனைப் பிரதிநிதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:-

க. பொ. த. (சா/த)வில் சித்தியும் ஆகக் குறைந்தது இப்பதவிகளில் ஏதாவதொன்றில் மூன்று வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கத் தகுதியுடையோர் 10-08-93 காலை 9-00 மணிக்கு யாழ்ப்பாணம் (கந்தர் மடத்தில்) பலாலி வீதியில் அமைந்துள்ள வருவாய்ப் பகுதிச் செயலகத்திற்கு உரிய சான்றிதழ்களுடன் நேரில் வருகை தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

-சேரன் பல்பொருள் அங்காடி,
அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7165)

## ENGLISH TEACHERS FOR KILINOCHCHI DISTRICT

"Applications are sought from retired officers and retired teachers for re-employment for English teaching in secondary schools in the Kilinochchi District The last drawn salary (with the necessary conversions) will be paid The applicants should satisfy at least one of the following requirements:

1. A Bachelor's degree from a recognized University with English as a Subject

OR

2 A Bachelor's degree from recognized University in the English medium

# பாரிய யுத்தக் கப்பல் காங்கேசனில் தரிப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை கடற்படைத் தளத்துக்கு பாரிய கடற்படைக் கப்பல் ஒன்று வந்து சேர்ந்துள்ளது. கடந்தவார நடுப்பகுதியில் வந்தடைந்த இப்பாரிய கடற்படைக்கப்பல் தொடர்ந்தும் மேற்படி துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளது

சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான இக்கப்பல்மூலம் சிறிலங்கா கடற்படையினருக்கும் இராணுவத்தினருக்கும் தேவையான ஆயுததளபாடங்களை எடுத்து வந்திருக்கக் கூடும் என்று தெரியவருகிறது.

இக்கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் நடைபெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இக்கப்பலில் இருந்து இறக்கப்பட்ட கொள்கலன்களில் ஆயுததளபாடங்கள் இருப்பதாக ஊகிக்கப்படுகிறது. (து)

## போக்குவரத்து பிரச்சினை செயலகத்தில் புகார்

[யாழ்ப்பாணம]

வவுனியாவில் நடைபெறும் பாடசாலை தொழிலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பிற்கான நேர்முகப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் சமுகம் தருவதில் உள்ள இடையூறுகளையிட்டு பலர் யாழ். செயலகத்திடம் புகார் தெரிவித்துள்ளனர்.

இந்த நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 15ஆம் திகதி வவுனியா கல்வித்திணைக்களத்தில் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிற்கான போக்குவரத்துப் பிரச்சினையையே பலர் எடுத்துக் கூறியுள்ளனர்
[தி]

## மீனவர்கள் மீது படையினர் வேட்டு

மண்டைதீவு இராணுவம் நேற்று முன்தினம் இரவு மண்டைதீவுக் கடலில் டிஸ்கோ வலை மூலம் மீன்பிடித்துக் கொண்டிருந்த குருநகர் மீனவர்கள் மீது வெளிச்சம் ஏவி பலதடவைகள் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தது

இச்சமயம் இக்கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த குருநகரைச் சேர்ந்த யேக்கப் பத்திக்குமார். யேக்கப் ராஜு ஆகியோர்களின் படகுகள் மீது இத்துப்பாக்கி ரவைகள் ஏவப்பட்டதாகவும், தாம் கடலினுள் பாய்ந்து மறைந்து இருந்து நீந்திக் கரை சேர்ந்ததாகவும் யேக்கப் பத்திக்குமார் தெரிவித்தார். (17)

## உளவியல் ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

'நன்' சஞ்சிகையினர் நடாத்தும் மாதம் ஓர் உளவியல் ஆய்வரங்கு 2ஆவது சனிக்கிழமைகளில் மாலை 4மணிமுதல் 5. 30 மணிவரை பருத்தித்துறை வீதியில் உள்ள எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முதல் ஆய்வரங்கு வரும் 14ஆம்திகதி நடைபெறும்.

## கிளை நிர்வாகத் தெரிவு

[அரியாலை]

யாழ் மாவட்ட தச்சுத் தொழிலாளர் சங்கத்தினர் தமது செயற்பாடுகளை பிரதேச மட்டத்தில் விரிவுபடுத்தும் நோக்கில், இன்று பிற்பகல் 3 00 மணிக்கு சாவகச்சேரி அமிர்தாம்பிகை வித்தியாசாலையில் [யூனியன் பேக்கரி முன்பாக] தென்மராட்சிக் கிளை நிர்வாகத்தை தெரிவு செய்யவுள்ளனர். [90]

## இலவச வகுப்புக்கள்

[தென்மராட்சி]

பளை தர்மக்கேணி அ. த. க. பாடசாலையில் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளுக்கு பாடசாலை விடுமுறையில் இலவச வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. அதிபரின் முயற்சியால் அண்மையில் நடைபெற இருக்கும் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு மீட்டல் வினா விடை வகுப்புகள் பிற ஆசிரியரின் உதவியுடன் நடாத்தப்படுகின்றன (86)

## பளை வைத்தியசாலைக்கு குளிர்சாதனப் பெட்டி

(தென்மராட்சி)

பளை அரசினர் வைத்தியசாலைக்கு மாவட்ட வைத்திய அதிகாரியின்முயற்சியால் புதிய குளிர்சாதனப் பெட்டி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை வைத்தியசாலைக்கு தற்பொழுது மின்சாரம் இருப்பதனால் அங்குள்ள முக்கிய மருந்து வகைகள் சிலவற்றை பாவிக்க இலகுவாக இருக்கின்றது. [86]

## விடுதியில் கைது

கொழும்பு நகரில் பொலிஸாரால் கைதான வடபகுதி இளைஞர் விடுதி ஒன்றில் வேலை செய்து வந்தவர் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

திருநாவுக்கரசு சிவகுமார் (நயினாதீவு) என்ற இந்த இளைஞர் சீபீச் இன் விடுதியில் வேலை செய்து வந்தார் இவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

வெளியிடும் உலக சினிமா தரம் பற்றிய இருமாத சினிமா இதழ் கிடைக்குமிடம்: வசந்தம் புத்தக நிலையம், 405 அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (5592)

## தவறிவிட்டது

ஸ்ரீ ரங்கநாதன் விக்னேஸ்வரி, 553 கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்பவருடைய பேர்ஸ் ஒன்று அடையாள அட்டை, பாஸ், ஒரு தொகைப் பணத்துடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [5643]

## விற்பனைக்கு

எம்மிடம் கடைப் பாவனைக்குரிய கண்ணாடி ஷோக் கேஸ்கள் [Show Case Glas) விற்பனைக்குண்டு தொடர்பு பொ துரைச்சாமி 15/6, கச்சேரி கிழக்கு, றெயில் றோட், யாழ்ப்பாணம். [5644]

கைலைன் பிறவுண், வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள், முயல், பான்சி புறாக்கள், பண்டம் கோழிகள் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகா பதி'' மானிப்பாய் (5646)

## தொண்டருக்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்ப் பிரிவு செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர் செல்வன் த. மோகனுக்கு பதக்கம் சூடிக் கௌரவிக்கும் விழாவும், சான்றிதழ் வழங்குதலும் இன்று பிற்பகல் 3 மணிக்கு மேற்படி சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது யாழ் மாவட்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க உப தலைவர் புலேந்திரன் விமானத்தாக்குதலுக்கு உட்பட்டு மரணமடைந்த போது, தன்னுயிரையும் மதியாது அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றமைக்காகவும், சங்குவேலியில் ஹெலித் தாக்குதலின் மத்தியிலும் மனிதநேயப் பணியில் ஈடுபட்டதற்காகவுமே இவர் கௌரவிக்கப்படவுள்ளார்.


டாக்டர் வை தியாகராசா தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் தையல் பயிற்சி முடிந்து வெளியேறும் மாணவ மாணவிகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. பிரதம விருந்தினராக யாழ் தலைமைக் காரியாலயத் தலைவர் த. சிங்கராசா கலந்து கொள்வார்.

வாங்கிப் பாவியுங்கள்.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(சி-7157)

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## வீரவேங்கை இந்திரஜித

(சரவணமுத்து நாகேஸ்வரராசா [ராசு] )

தாயின் மடியில் 11- 05- 1971

கடலிற் காவியம் 15 08- 1990

திதி:- 10. 08. 1993

வீரம் செறிந்த வல்வை மண்ணில்
வந்துதித்த எமது செல்வனே நமது
தாயக மண்ணின் விடிவிற்காய் புறப்பட்டாய்
நம் மண்ணின் விடியலுக்கு முன்
கடலிலே காவியமாகி விட்டாய்

உன் நினைவுகள் நிறைவேற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாளை (10 08 1993) எமது இல்லத்தில் மதியம் நடக்கும் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

நேசமணி வாசா,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி. (5631)

பெற்றோர்,
சகோதர,
சகோதரிகள்.

# ENGLISH TEACHERS FOR KILINOCHCHI DISTRICT

"Applications are sought from retired officers and retired teachers for re-employment for English teaching in secondary schools in the Kilinochchi District The last drawn salary (with the necessary conversions. will be paid The applicants should satisfy at least one of the following requirements:

1. A Bachelor's degree from a recognized University with English as a Subject

OR

2. A Bachelor's degree from recognized University in the English medium

OR

3. A pass in English in the G. C. E. (Advanced Level) with passes in two other subjects

OR

4. Training in English teaching in a recognized teacher's training college.

Applicant will have to prepare their own applications giving their Bio - data and all other relevant particulars and send same to reach Head, English Language Teaching Centre, University of Jaffna, Jaffna on or before 20th August 1993. Selection by written Examination and Interview."

University of Jaffna.
Jaffna.

Registrar.

(சி-7156)

# 31-ம் நாள் நினைவலைகள்



உதயம்
06-05-1920

அஸ்தமனம்
10-07-1993

## அமரர் திருவயிரவன் கிருஷ்ணர்

அணையாத தீபமே! அகல் விளக்கே!
உமக்கு இணையாக யாருளர் இலங்கு மிவ்வுலகில்
துணையாக உலகினில் யாருளர் எமக்கினி
துயர் தணியாமல தவிக்கின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அம்மன் வீதி,
மாவை கலட்டி
09- 08- 1993
(5642)

தங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், !சகோதரர்கள்

திக்குமார். யேக்கப் ராஜு ஆகியோர்களின் படகுகள் மீது இத்துப்பாக்கி ரவைகள் ஏவப்பட்டதாகவும், தாம் கடலினுள் பாய்ந்து மறைந்து இருந்து நீந்திக் கரை சேர்ந்ததாகவும் யேக்கப் பத்திக்குமார் தெரிவித்தார். (17)

## உளவியல் ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

'நங்' சஞ்சிகையினர் நடாத்தும் மாதம் ஓர் உளவியல் ஆய்வரங்கு 2ஆவது சனிக்கிழமைகளில் மாலை 4மணிமுதல் 5. 30 மணிவரை பருத்தித்துறை வீதியில் உள்ள எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முதல் ஆய்வரங்கு வரும் 14ஆம்திகதி நடைபெறும்.

குளிர்சாதனப் பெட்டி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை வைத்தியசாலைக்கு தற்பொழுது மின்சாரம் இருப்பதனால் அங்குள்ள முக்கிய மருந்து வகைகள் சிலவற்றை பாவிக்க இலகுவாக இருக்கின்றது. [86]

## விடுதியில் கைது

கொழும்பு நகரில் பொலிஸாரால் கைதான வடபகுதி இளைஞர் விடுதி ஒன்றில் வேலை செய்து வந்தவர் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

திருநாவுக்கரசு சிவகுமார் (நயினாதீவு) என்ற இந்த இளைஞர் சிபீச் இன் விடுதியில் வேலை செய்து வந்தார் இவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

# நினைவு கூருகின்றோம்...

## 1993-08-09

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு அச்சுவேலிப்பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

வடமராட்சி, வலிகாமம், தீவகப்பொறுப்பாளர்,

**மேஜர் ஜேம்ஸ்** [உருத்திராபதி சிறீதர்-நெடியகாடு-வல்வெட்டித்துறை]

**ஞானம்** [ஐயாத்துரை கோபாலகிருஷ்ணன்-ஞானம்வீதி, அச்செழு-யாழ்]

வவுனியா-கொறவப்பொத்தானைவீதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட 02 பெண்கள் உட்பட 19 தமிழர்கள்.

யாழ்-புகையிரதநிலைய இடம்பெயர்ந்தோர் முகாம் மீது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக்குண்டுவீச்சில் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண். வேலணை கிழக்கு 1-ம் வட்டாரம் மற்றும் அராலித்துறைப் பகுதிகளில் சிறிலங்கா விமானப்படையினர் உலங்கு வானூர்தியிலிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொலலப்பட்ட 02 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவு முகாமிலிருந்து வெளியேறமுயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

**லெப் விக்கி** [விக்னேஸ்வரி சதாசிவம்-பூந்தோட்டம்-வவுனியா]

**விஜித்திரா** (புஸ்பராணி செல்லையா-முறிகண்டி-கிளிநொச்சி)

1992ஆம் ஆண்டு மட்டு மாவட்டத்தில் பாம்பு கடித்தில் எமைப்பிரிந்த.

**லெப்.முரளிதரன,ஐதீஸ்** (தர்மரத்தினம் ரவிச்சந்திரன்-வாழைச்சேனை-மட்டு)

மட்டு-புனானைப்பகுதியில் சிறிலங்கா இராணுவம் சுற்றிவளைத்து பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள் உட்பட சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்ட 50 க்கும் மேற்பட்ட தமிழ்மக்கள்.

பொலநறுவை-வெலிகந்த மயிலந்தலாவைப்பகுதியில் ஆயுதம் தாங்கிய முஸ்லிம் கும்பல்களால் கொல்லப்பட்ட 24 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-7160)

## சிந்தனைக்கு

ஆற்றலைக் காட்டிலும், மிக உயர்வானதும் அருமையானதும் காண்பதற்கு அரிதானதும் ஒன்று உண்டு. அதுதான் ஆற்றலை இனம் கண்டு போற்றும் ஆற்றல் ஆகும்.

-எல்பெர்ட் ஹப்பர்ட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 09-08-1998

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023

த. பெ. எண்-05

# என்றோ ஒரு நாள் ஏற்கத்தான் வேண்டும்

இதுவரை தமிழருக்கு எதிராக கூக்குரல் இட்டு வந்த பௌத்த சிங்கள அடிப்படைவாதிகள் தற்பொழுது சிங்கள அரசிற்கு எதிராகவும், தமது கவனத்தைத் திருப்பியுள்ளனர். இதன் ஒருகட்டமாகவே விடுதலைப்புலிகளைப் போரில் வெல்ல முடியாது போனால், அரசாங்கம் இராஜினாமாச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையாகும்.

உலக வரலாற்றில் யுத்தத்தில் வெல்ல முடியாமல், தோற்றுப்போன அரசாங்கங்கள் பதவி விலகியமைக்கும், அல்லது கவிழ்க்கப்பட்டமைக்கும் பல உதாரணங்கள் உண்டு. இந்நிலையில் யுத்தத்தில் வெல்ல முடியாது என்றால், அரசாங்கத்தை பதவி விலகுமாறு கோருவது என்பது புதுமையானது ஒன்றல்ல. ஆனால், பதவி விலகுமாறு கோருபவர்கள் யுத்தத்தை வெறுப்பவர்களோ அன்றி சமாதானத்தில் நாட்டம் கொண்டவர்களோ அல்ல. இராணுவ தீர்வு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டு விடலாம் எனக் கருதுபவர்கள் ஆகும்.

ஆனால், இப்பேரினவாதிகளின் இக்கூக்குரலானது, உலகத் தேசிய விடுதலைப் போராட்டங்கள் பற்றியும், இன்றைய உலக அரசியலின் போக்கையும், விடுதலைப்புலிகளின் போராடும் திறன், ஆற்றல் என்பனபற்றியும் சரியாகக் கணிப்பீடு செய்யவில்லை என்றே கூறலாம். இன்று உலகின் பலபாகங்களிலும் முக்கிய கூர்ப்புப்பெற்ற பிரச்சினையாக தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களே உள்ளன. இதனால், சோவியத் யூனியன் என்ற வல்லரசு சிதைந்தது. செக்கோசெலவோக்கியா பிரிந்தது. முன்னாள் யூக்கோசெலவோக்கியா இரத்தம் சிந்திக்கொண்டிருக்கின்றது இவை மாத்திரமல்ல, பிரிந்து சென்றுவிட்ட சோவியத் யூனியனில் அங்கம்வகித்த அநேக நாடுகளில் உள்ள சிறுபான்மை தேசிய இனங்கள் தமது சுதந்திரத்திற்காக தொடர்ந்து போராடுகின்றன. மூன்றாம் உலக நாடுகளிலும் தேசிய இனங்களின் பிரச்சினை நிறையவே உள்ளது.

இவையாவும், உடனடியாக இன்று, நேற்று உருவாகிய தேசிய இனங்களும் அல்ல. போராட்

# காமினியை இணைப்பதற்கு விஜேதுங்கவிரும்புவதுஏன்?

– ராவய ஆசிரியரின் விளக்கம்

[கொழும்பு]

காமினி திசாநாயக்கவையும், அவரது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கட்சியையும் அரசாங்கத்துடன் இணைத்துக் கொள்வதில் ஜனாதிபதி டி. பி விஜேதுங்க ஆர்வம் காட்டுவது ஏன் என்ற கேள்விக்கு, 'ராவய' பத்திரிகையின் ஆசிரியரான விக்டர் ஐவன் பதிலளித்துள்ளார். தற்போதைய அரசுடன் காமினிதிசாநாயக்காவை இணைத்துக் கொள்வதன் மூலம் இந்திய அரசின் உதவியைநாட ஜனாதிபதி விஜேதுங்க எண்ணுகின்றார். ஆனால் இது அவ்வளவு சுலபமானதாக இல்லை எனவும் விக்டர் ஐவன் மேலும் கூறியுள்ளார்.

காமினி திசாநாயக்காவை மீண்டும் ஐ. தே கவுடன் இணைத்துக் கொள்வது தொடர்பாக ஐ. தே. கவினுள் அதிருப்தி நிலவுகின்றது அதேபோல் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியிலும் இப்போக்கிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பலர் இருக்கின்றனர். எனவேதான் டி. பி. விஜேதுங்க நினைப்பது போல் காமினியையும் அவரது ஆதரவாளர்களையும் இணைத்துக் கொள்வது சுலபமானதாக இல்லை என்று விக்டர் ஐவன் மேலும் தெரிவித்துள்ளார்.

# அடுத்த ஆண்டில் தேர்தல் நாடெங்கும் நடக்கலாம்

-அத்தாவுட தெரிவிப்பு

[கொழும்பு]

அடுத்த ஆண்டு தேர்தல் ஆண்டாக இருக்கலாம். இதே ஆண்டில் அநேகமாக ஜனாதிபதித் தேர்தலும் இடம்பெறலாம் என்று கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய சோசலிச கூட்டணியைச் சேர்ந்தவருமான அத்தாவுட செனவிரத்தினா தெரிவித்தார்.

தெகியோவிட்ட ல. ச. ச. கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த சிலர் மீண்டு ஐ. தே. கவில் சேரப் போவதாகக் கூறப்படுகின்றது. இது எந்தளவு உண்மை என்பது தெரியவில்லை. ஆனால் அவர்கள் அப்படிச் சேர்ந்தால் அதில் புதினம் ஒன்றுமில்லை ஏனென்றால் காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாஸாவின் தனி ஆட்சியை மட்டுமே அவர்கள் எதிர்த்தனர். பொறுப்புக்கள் அனைத்தையும் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் விடவேண்டுமென்ற இவர்களின் எதிர்பார்ப்பு ஜனாதிபதி விஜேதுங்கவினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்போது ஜ ஐ தே. மு மீண்டும் ஐ தே கவுடன் சேருவதால் எமக்கு எதுவித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை.

அதேபோல் சி. ல. சு கவிலும் உட்பூசல் மூலம் சிலர் வெளியேற்றப் பட்டுள்ளனர். அப்படி அவர்கள் வெளியேறினாலும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பலம் குறையப் போவதில்லை.

எனவே கட்சியின் உறுப்பினர்கள் கட்டுக்கோப்பாகவும் ஐக்கியமாகவும் இருந்து கட்சியைப் பலப்படுத்த வேண்டும் என்றும் அத்தாவுட செனவிரத்தினா கேட்டுக்கொண்டார்.

# ஜ. ஐ. தே.முவுடனான பேச்சு பயனுடையதாக இருந்தது

ஜனாதிபதி விஜேதுங்க

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியுடன் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் பயனுடையவையாக இருந்தன என்று ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க செவ்வாயன்று நடைபெற்ற ஐ தே கவின் செயற்குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் விபரம் குறித்து விளக்கமளித்த அவர் மேலும் கூறுகையில் பேச்சுக்கள் ஆறுதலானவையாக இருந்தாலும் உறுதியானவையாக இருந்தன என்றும், இருகட்சிகளும் இணைந்துகொள்வது தொடர்பாக அரசியல்வாதிகள் கருத்து வெளியிடும்போது கவனமாகச் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்'

# ஜனாதிபதி மாறிவிட்டால்

# ஆட்சியை கைப்பற்றுவதிலேயே கட்சிகளுக்கு அக்கறை

-எஸ். எல். குணசேகரா தெரிவிப்பு

(கொழும்பு)

எமது அரசியல் கட்சிகள் அனைத்தும் ஆட்சியைக் கைப்பற்றுவதிலேயே கவனம் செலுத்துகின்றன. ஒவ்வொருவரும் தம் சொந்த நலனிலேயே அக்கறை செலுத்துகின்றனர். இரண்டாவதாக குடும்ப நலனைப் பார்க்கின்றனர். அதன் பின்னர்தான் நாட்டைப் பற்றி சிந்திக்கின்றனர்.

இவ்வாறு சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான எஸ் எல் குணசேகரா தெரிவித்தார்.

கோட்டை நாகவிகாரையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் தொடர்ந்து கூறுகையில்,

இந்த நாட்டின் தலைவர்கள் யுத்தத்தை சரிவரப் புரிந்து கொள்ளவில்லை யுத்தத்திற்கு தீர்வு அவசியம் எனக் கூறும் கட்சிகள் அதனை எப்படித் தீர்க்கலாம் என்பதை தெளிவாகக் கூறும்நிலையில்இல்லை. எமது இராணுவத்தை பலப்படுத்த வேணடும். எமது படைவீரர்களை நன்கு கவனிக்க வேண்டும். வாகனத் தட்டுப்பாடு, தொலைத்தொடர்பு வசதிகள் என்பன போதியளவில் படையினருக்கு இல்லை எனவும் தெரிவித்தார்.

அத்துடன் இராணுவத்தின் பலம் விடுதலைப் புலிகளின் பலத்தைவிட குறைந்தது என்ற நிலையிலிருந்தால் அல்லது அவ்வாறு கருதப்படுமானால் நாம் அடிபணிந்து யுத்தத்தை நிறுத்துவதே வழியாகும். வடக்கு-கிழக்கு யுத்தத்தில் புலிகளை வெல்ல முடியாது என்ற நிலையிருக்குமானால் அரசாங்கம் உடன் ராஜினாமாச் செய்யவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

# தாண்டிக்குளம் படையினர் விசித்திர விசாரணை

[வவுனியா]

தாண்டிக்குளம் இராணுவச் சோதனைச் சாவடியில் பணியிலுள்ள படையினர் பயணிகள் மீது விசித்திரமான விசாரணை ஒன்றை மேற்கொண்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

கிளாலி படகு சேவை நடைபெற்று கூடுதலான பயணிகள் வரும் நாள்களில் ஐந்நூறு பேர் வரையில் தடுத்து வைக்கும் படையினர் அன்னியோன்யமான முறையில் நடந்து கொண்டு வட பகுதி நிலைவரங்கள் பற்றிக் கேட்டறிந்து கொள்வதாகவும், கூறப்படுகிறது. வடக்கிலிருந்து வருவோரில் இளைஞர்கள் மட்டுமன்றி நடுத்தர வயதினரும் இவ்வாறு தடுத்து வைக்கப்படுவதாகவும், பயணிகள் குறைவாக வரும் நாள்களில் ஒரு சிலரும் கூடுதலாக வரும் நாள்களில் பலரும் இந்த விசித்திர விசாரணைக்கு முகம் கொடுக்க நேருவதாகவும் தெரிய வருகிறது.

# தலைமைத்துவ பயிற்சி

[கொழும்புத்துறை]

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மிகப் பின் தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மக்களின் ஆளுமையினை அபிவிருத்தி செய்யும் நன்நோக்குடன் யாழ் பல்கலைக்கழகப் புற நிலைப் படிப்புக்கள் அலகும், யாழ்ப்பாணப் பிரதேச உள்ளூராட்சித் திணைக்களமும் கூட்டாக இணைந்து கிராமிய தலைமைத்துவப் பயிற்சி நெறியை அளிக்கவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு சனசமூக நிலையங்களைச் சேர்ந்த மிக்க ஆர்வமுள்ள ஜி. சீ. ஈ (சாதாரணம்) வரையயின்ற உறுப்பினர்களான ஆண், பெண் இருபாலாரும் தங்கள் பகுதிச் சனசமூக நிலையங்களின் ஊடாக தம்மை அத்தாட்சிப்படுத்தி விண்ணப்பிக்குமாறு யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சுந்தரப்-டீவகலாலா தெரிவித்துள்ளார். (24)

# தேர்தல் சட்டங்களில் சீர்திருத்தம் வேண்டும்

- பாரதீய ஜனதா கோரிக்கை

(டில்லி)

தேர்தல் ஆணையகத்தை பல உறுப்பினர் அமைப்பாக உடன் மாற்றியமைக்க வேண்டும் என்றும், தேர்தல் சட்டங்களில் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்றும், மத்திய அரசை பாரதீய ஜனதாக் கட்சி வலியுறுத்திக் கேட்டுள்ளது.

புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய இச்செய்தித் தொடர்பாவர் கே.எல். சர்மா மேலும் கூறுகையில், தேர்தல் ஆணையகம் பல உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்க வேண்டுமென்பதில் அரசியல் கட்சித் தலைவர்களுக்கிடையே இணக்கம் காணப்பட்டிருக்கிறது என்றும், இடைத் தேர்தல்கள் தள்ளி வைத்திருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும்உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருப்பதை மத்திய அரசும், தேர்தல் ஆணையகமும் ஏற்றுச் செயல்படும் என்று கட்சி நம்புவதாகவும் தெரிவித்தார்.

மேலும் மத்தியஅரசு இந்தப் பிரச்சினைகளில் இனியும் காலதாமதம் செய்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# இந்தியாவுடன் நல்லுறவு மீள ஏற்படுத்த பிஜி ஆர்வம்

(வாஷிங்டன்)

இந்தியாவுடனான ராஜதந்திர உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ள பிஜி ஆர்வம் கொண்டுள்ளது என்று பிஜி வெளிவிவகார அமைச்சரும் துணைப் பிரதமருமான சிலுக்கி போலே கூறியுள்ளார்.

தற்போது வாஷிங்டன் சென்றுள்ள அவர் அங்கு பத்திரிகையாளர்களிடம்பேசுகையில், மேலும் இந்திய வம்சாவளியி... டில் பிஜி அரசு பிறப்பித்த சட்டங்கள் மறுபரிசீலனை செய்யப்படுவது இதற்கு உந்துதல் அளிக்கும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் 1987ஆம் ஆண்டின் திடீர் புரட்சிக்கு முன்னர் பிஜிக்கும் இந்தியாவிற்கும் இடையில் நிலவிய நல்லுறவுகளை மீண்டும் ஏற்படுத்துவதில் பிஜி ஆர்வம் கொண்டுள்ளதாகவும், பிஜியின் இந்த

ஆனால், இப்பேரினவாதிகளின் இக்கூக்குரலானது, உலகத் தேசிய விடுதலைப் போராட்டங்கள் பற்றியும், இன்றைய உலக அரசியலின் போக்கையும், விடுதலைப்புலிகளின் போராட்டத் திறன், ஆற்றல் என்பனபற்றியும் சரியாகக் கணிப்பீடு செய்யவில்லை என்றே கூறலாம். இன்று உலகின் பலபாகங்களிலும் முக்கிய கூர்ப்புப்பெற்ற பிரச்சினையாக தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களே உள்ளன. இதனால், சோவியத் யூனியன் என்ற வல்லரசு சிதைந்தது. செக்கோ செல்வோக்கியா பிரிந்தது. முன்னாள் யூக்கோ செல்வோக்கியா இரத்தம் சிந்திக்கொண்டிருக்கின்றது இவை மாத்திரமல்ல, பிரிந்து சென்றுவிட்ட சோவியத் யூனியனில் அங்கம்வகித்த அநேக நாடுகளில் உள்ள சிறுபான்மை தேசிய இனங்கள் தமது சுதந்திரத்திற்காக தொடர்ந்து போராடுகின்றன. மூன்றாம் உலக நாடுகளிலும் தேசிய இனங்களின் பிரச்சினை நிறையவே உள்ளது.

இவையாவும், உடனடியாக இன்று, நேற்று உருவாகிய தேசிய இனங்களும் அல்ல, போராட்டங்களும் அல்ல. அடக்கி ஒடுக்கப்பட்ட போதும் நீறுபூத்த நெருப்பாக இருந்து பின்னர் வெளிக்கிளம்பியவை. இத்தேசிய இனங்களின் சக்தி பெரியது.

இந்நிலையில், தேசிய இன விடுதலைப்போராட்டங்களை இராணுவ ரீதியாக ஒடுக்கிவிடலாம் எனக் கருதுபவர்கள் கற்பனை உலகில் வாழ்பவர்கள் என்றே கூறவேண்டும். மேலும், விடுதலைப்புலிகள் போன்ற செயற்பாடுமிக்க இயக்கம் ஒன்றை இராணுவ ரீதியாக வெற்றி கொள்ளுதல் என்பது சாத்தியமாக கூடிய தொன்றல்ல. இதனை கற்பனையில், எழுமாற்றாகக் கூறப்படவில்லை. கடந்த பத்து வருடங்களாகப் போரிடும் சிறிலங்கா இராணுவமும், இடையில் இரண்டரை வருடங்களாகப் போரிட்ட இந்திய இராணுவத்தினாலும் இதனை சாதிக்க முடியவில்லை என்ற அனுபவரீதியான வெளிப்பாட்டின் அடிப்படையிலேயே கூறப்படுகின்றது.

இந்நிலையில், வெல்ல முடியாத இந்த யுத்தத்திற்காக பேரினவாதிகள் கூறுவது போன்று அரசாங்கம் பதவி விலகி விடுவதினால் ஏதும் பயன் ஏற்பட்டு விடும் எனக் கருதுவதில் அர்த்தமில்லை. ஏனெனில், புதிதாக பதவி ஏற்கும் எந்த அரசாங்கமும் போரில் வெல்லப் போவதில்லை. இதே வேளை தோல்விகளைச் சந்திக்க வேண்டி வருவது தவிர்க்க முடியாததாகும். ஐ. தே. க. அரசாங்கம் 15 வருட காலம் ஆட்சியில் இருக்கலாம். ஆனால், சிங்களவர்களின் புகழ்பூத்த இரு தலைவர்களான ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ரணசிங்க பிரேமதாசா ஆகிய இருவர். இக்காலத்தில் ஆட்சி புரிந்துள்ளனர். அவர்களினால் கூட இப்போரில் வெற்றிபெற முடியவில்லை.

ஆகையினால், அரசால் யுத்தத்தில் வெல்ல முடியாது என்பதே யதார்த்த நிலை. அந்நிலையில் பேரினவாதிகளான எஸ். எல். குணசேகரா, "எமது இராணுவத்தினரின்பலம் புலிகளின் பலத்தைவிடக் குறைந்ததெனக் கருதினால், நாம் அடிபணிந்து யுத்தமிடுவதை நிறுத்துவதே ஒரேவழி" எனக்குறிப்பிட்டது கவனத்திற்குரியது. ஆனால், எஸ். எல். குணசேகரா இதனை வெறுப்பின் வெளிப்பாடாகத் தெரிவித்தாரே ஒழிய யதார்த்தத்தின் கணிப்பீடாகச் சொல்லவில்லை. ஆனால், இதனை அவர் எவ்வாறு கூறினாலும் அதுவே யதார்த்தம். அதனை அவர் இன்று ஏற்காது விடினும், என்றோ ஒருநாள் ஏற்றுத்தான் ஆகவேண்டிவரும்.

---

அப்படிச் சேர்ந்தால் அதில் புதினம் ஒன்றுமில்லை ஏனென்றால் காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாஸாவின் தனி ... ஐக்கியமாகவும் இருந்து கட்சியைப் பலப்படுத்த வேண்டும் என்றும் அத்தாவுட செனவிரத்தினா கேட்டுக்கொண்டார்.

## ஐ. ஐ. தே. மு வுடனான பேச்சு பயனுடையதாக இருந்தது

ஜனாதிபதி விஜேதுங்க

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியுடன் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் பயனுடையவையாக இருந்தன என்று ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க செவ்வாயன்று நடைபெற்ற ஐ தே கவின் செயற்குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் விபரம் குறித்து விளக்கமளித்த அவர் மேலும் கூறுகையில் பேச்சுக்கள் ஆறுதலானவையாக இருந்தாலும் உறுதியானவையாக இருந்தன என்றும், இரு கட்சிகளும் இணைந்துகொள்வது தொடர்பாக அரசியல்வாதிகள் கருத்து வெளியிடும்போது கவனமாகச் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்'

---

... புற நிலைப் படிப்புக்களின் அலகும், யாழ்ப்பாணப் பிரதேச உள்ளூராட்சித் திணைக்களமும் கூட்டாக இணைந்து கிராமிய தலைமைத்துவப் பயிற்சி நெறியை அளிக்கவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு சனசமூக நிலையங்களைச் சேர்ந்த மிக்க ஆர்வமுள்ள ஜி. சி. ஈ (சாதாரணம்) வரைபயின்ற உறுப்பினர்களான ஆண், பெண் இருபாலாரும் தங்கள் பகுதிச் சனசமூக நிலையங்களின் ஊடாக தம்மை அத்தாட்சிப்படுத்தி விண்ணப்பிக்குமாறு யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சுந்தரப்-டீலகலாலா தெரிவித்துள்ளார். (24)

---

# ஜனாதிபதி மாறிவிட்டதால் ஜனநாயகம் தோன்றிவிடவில்லை

– ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியின் கதிரையில் ஒருவருக்குப் பதிலாக வேறு ஒருவர் அமர்ந்ததினால் நாட்டில் இடம்பெறும் ஜனநாயக எதிர்ப்புநிலை மாறிவிட்டதாக எண்ணவில்லை எனவும், இதனால் குறைந்த பட்சம் தமது கட்சியின் அரசியல் குழு மற்றும் மத்திய குழு உறுப்பினர்களின் பெயர்களை வெளியிட முடியாது எனவும் ஜே. வி. பி. யின் தற்போதைய தலைவராக கருதப்படும் சோமவன்ச அமரசிங்க கூறியுள்ளார்.

'லங்காதீப' பத்திரிகையில் அண்மையில் வெளிவந்த செய்தி ஒன்றுக்கு பாரிசிலிருந்து பதில் அளித்துள்ள அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில், ஜே.வி.பி. எந்த நேரத்திலும் எந்த நாட்டிலிருந்தும் இரகசிய அமைப்புகள் மூலம் உதவிகள் எதையும் பெறவில்லை எனவும், தற்போதும் பெறுவதில்லை எனவும் தெரிவித்தார். ஜே. வி. பி யின் சரித்திரத்தில் இவ்வாறு நிகழ்ந்தது கிடையாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ளவர்களிடமும், வெளிநாடுகளில் இருக்கும் இலங்கையர்களிடமும் மட்டுமே உதவி பெறுவதாகக் குறிப்பிட்டுள்ள அவர் அதுவே தமக்குப் போதுமானது எனவும், தற்போது பிரதான செயலாளராக கடமை வகிக்கும் தனக்கு தரப்பட்டுள்ள கடமைகள் பற்றி நன்கு தெரியும் எனவும் கட்சியின் உயர் மட்டத்தில் காலியாகவுள்ள இடங்கள் அவை எவ்வித காலதாமதமும் இன்றி கட்சி விதிகளின்படி நிரப்பப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

---

## பயிர்களின்பாதுகாப்பிற்காக விவசாயிகளுக்கு துப்பாக்கி

- அஷ்ரப் கோரிக்கை

[கொழும்பு]

பாதுகாப்பு காரணங்களுக்காக விவசாயிகளிடமிருந்து மீளப்பெறப்பட்ட துப்பாக்கிகள் மீண்டும் அவர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

பாராளுமன்றத்தில் தாவர, விலங்கின பாதுகாப்பு திருத்தச்சட்ட மூலம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அஷ்ரப் மேலும் கூறுகையில்,

சட்டத்தினால் பாதுகாக்கப்படும் வனவிலங்குகளினால் விவசாயிகளின் பயிர்களுக்கு ஏற்படுத்தப்படும் சேதங்கள் தொடர்பாகவும் வன விலங்குகளிடமிருந்து விவசாயப் பயிர்களை பாதுகாப்பதற்காகவும் விவசாயிகளுக்கு வேட்டைத் துப்பாக்கிகளாவது வழங்கப்படல் வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

---

## கதிர்காமத்தில் யானை தாக்கி வாலியர் மரணம்

கதிர்காம அசலபெரஹரா உற்சவத்திற்கு கொண்டுவரப்பட்ட யானை, வணங்குவதற்காக அங்கு சென்றிருந்த தமிழ் இளைஞர் ஒருவரைத் தாக்கிக் கொன்றுள்ளது.

இத்தாக்குதலினால் கொல்லப்பட்டவர் நோட்டன் பிரிஜ் மிற்பொட் தோட்டத்தைச் சேர்ந்த 27 வயதான சுப்பிரமணியம் தங்கராசா என்பவராவார்.

கடந்த 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விடியற்காலை 6.00 மணி வரையில் இந்த இளைஞர் கதிர்காமக் கோயிலுக்கு அண்மையில் சங்கிலியால் கட்டப்பட்டிருந்த யானைக்கு அண்மையில் சென்றபோது இவர் தாக்கிக் கொல்லப்பட்டதாகவும் அவ்வேளை கதிர்காம மரண விசாரணையாளர் சோமரத்ன குணவர்த்தனா அவர்களால் இது சம்பந்தமான மரண விசாரணைநடைபெற்றபோது காலஞ்சென்ற இளைஞர் வேறு எட்டு இளைஞர்களுடன் அங்கு வந்திருந்ததாகவும், இவர்கள் கோவிலுக்கு அண்மையில் தங்கியிருந்ததாகவும் சம்பவம் நடைபெற்ற தினம் மரணமாகியவர் 6.00 மணியளவில் எழும்பி யானைக்குச் சமீபமாகச் சென்றதாகவும் விபரிக்கப்பட்டது.

யானை தாக்கியதினால் மரணம் சம்பவித்ததாக மரண விசாரணையாளர் தீர்ப்புக் கூறினார்.

---

### புதிய கிளை திறப்பு

(வடமராட்சி)

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொற்றாவத்தைக் கிராமத்தில் மக்கள் கடை ஒன்றை நேற்றுமுன்தினம் காலை சங்கத்தலைவர் திரு. சி. கணபதிப்பிள்ளையினால் திறந்து வைத்துள்ளது.

(யோ)

---

... ளது.

புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய இச்செய்தித் தொடர்பாளர் கே.எல். சர்மா மேலும் கூறுகையில், தேர்தல் ஆணையகம் பல உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்க வேண்டுமென்பதில் அரசியல் ... படும் என்று கட்சி நம்புவதாகவும் தெரிவித்தார்.

மேலும் மத்திய அரசு இந்தப் பிரச்சினைகளில் இனியும் காலதாமதம் செய்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

## இந்தியாவுடன் நல்லுறவு மீள ஏற்படுத்த பிஜி ஆர்வம்

(வாஷிங்டன்)

இந்தியாவுடனான ராஜதந்திர உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ள பிஜி ஆர்வம் கொண்டுள்ளது என்று பிஜி வெளிவிவகார அமைச்சரும் துணைப் பிரதமருமான சிலுக்கி போலே கூறியுள்ளார்.

தற்போது வாஷிங்டன் சென்றுள்ள அவர் அங்கு பத்திரிகையாளர்களிடம் பேசுகையில், மேலும் இந்திய வம்சாவளியினர் அரசின் முக்கிய பதவிகளை வகிப்பதை தடை செய்யும் வகையில் 1990ஆம் ஆண்டில் பிஜி அரசு பிறப்பித்த சட்டங்கள் மறுபரிசீலனை செய்யப்படுவது இதற்கு உந்துதல் அளிக்கும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் 1987ஆம் ஆண்டின் திடீர் புரட்சிக்கு முன்னர் பிஜிக்கும் இந்தியாவிற்கும் இடையில் நிலவிய நல்லுறவுகளை மீண்டும் ஏற்படுத்துவதில் பிஜி ஆர்வம் கொண்டுள்ளதாகவும், பிஜியின் இந்த ஆர்வத்தை இந்தியா பரிசீலிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

---

## சிந்திமொழி மக்களுக்கு சுயநிர்ணய உரிமை தேவை

பாகிஸ்தானில் வாழும் சிந்திமொழி பேசும் நான்கு கோடி மக்களும் ஐக்கியநாடுகள் சபையின் அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் சுயநிர்ணய உரிமை பெறத் தகுதியுடையவர்களாவர் என்று டாக்டர் காலி போட்டா கூறியுள்ளார்.

உலக சிந்திக் காங்கிரஸின் தலைவரான இவர் ஜெனிவாவிலுள்ள ஐ.நா. துணைச்செயலகத்திற்கு எழுதியுள்ள கடிதமொன்றில் மேலும் குறிப்பிடுகையில் சிந்தி மொழி அறிஞர்கள், மாணவர்கள் உட்பட பெரும் தொகையானோர் பாகிஸ்தானின் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாகவும், அரசியல் இயக்கத்தினர் பலரும் அப்பாவி மக்கள் பலரும் கொல்லப்படும் வகையில் சித்திரவதைகளும், இராணுவ நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

---

## ஐ. நா. தலையீடு செய்ய ரஷ்ய அதிபர் கோரிக்கை

(மாஸ்கோ)

ஆப்கானிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தான் எல்லை நெடுகிலும் நடக்கும் சண்டைகளை தடுத்து நிறுத்துவதற்கு ஐ நா தலையீடு செய்ய வேண்டும் என்று ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சின் கேட்டுக்கொண்டார்.

தஜிகிஸ்தான், உஸ்பெஸ்கிஸ்தான், கஜகிஸ்தான், கிர்கிஸ்தான் ஆகிய நாடுகள் ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்ட்சின்னுடன் நடத்திய ஆலோசனையை அடுத்து இந்த வேண்டுகோள் கூட்டாக வெளியிடப்பட்டுள்ளது.

---

கியூபாவிற்கு எதிரான

## பொருளாதாரத் தடையை அமெரிக்காவிலக்கவேண்டும்

–சமயத்தலைவர்கள் கோரிக்கை

(மெக்சிக்கோ)

கியூபாவிற்கு எதிராக அமெரிக்க அரசாங்கம் மேற்கொண்டுள்ள பொருளாதாரத் தடைகளுக்கு அமெரிக்க சமயக் குழுவினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் அமெரிக்கா மற்றும் கனடாவில் சேகரித்த நிதியுதவிகளைக் கொண்டு கியூபாவிற்கு நூறு மெற்றிக்தொன் உணவுப் பொருள்களை அனுப்பி வைத்துள்ளனர். மெக்சிக்கோ துறைமுகத்தில் கப்பலில் ஏற்றப்பட்ட இந்த உணவுப் பொருள்கள் ஹவானா துறைமுகத்தில் கியூபா அரசிடம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இச்சமயக் குழுவின் இணைப்பாளர் இதுபற்றி தெரிவிக்கையில் நேர்மையற்ற இந்தப் பொருளாதாரத் தடையை இனிமேலாயினும் அமெரிக்கத் தலைவர்கள் கைவிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஈழநாதம்

## பழுதடைந்த உணவு உண்ட 10 பேர் ஆஸ்பத்திரியில்

[யாழ்ப்பாணம்]

பழுதடைந்த உணவை உட்கொண்ட 10 பேர் மயக்கமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றையதினம் காலை உணவாக இடியப்பமும், பழைய கறியாக பருப்புக் கறியையும் உட்கொண்ட யாழ். மடம் வீதியைச் சேர்ந்த சுகந்தினி (18), உதயசூரியர் (03), அருச்சுனா (08), சோபனா (10), பரராஜசிங்கம் (37), புகேசன் (07), வசந்தி (33), நாகேஸ்வரி(36), வாகீசன் (04), பாமினி (02) ஆகியோரே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### வடக்கு – கிழக்குப் பகுதிகளில்

## இடைக்கால நிர்வாகம்; தமிழ் குழுக்கள் பேச்சு

வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்று அமைப்பது குறித்து கொழும்பிலுள்ள தமிழ் குழுக்கள் முக்கிய அரசியற்கட்சி தலைவர்களுடன் அண்மைக்காலமாக பேசி வருவதாக கொழும்பு தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இடைக்கால நிர்வாக யோசனை ஒருபுறமிருக்க வடக்கு கிழக்கில் குறிப்பாக கிழக்கில் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை விரைவாக நடத்தி முறையான சிவில் நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என எதிரணி வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

## நவம்பர் 20 பரீட்சை

அரசாங்க, மாகாண அரசாங்க பொது எழுதுநர் சேவையின் இரண்டாம் வகுப்பின் "அ" பிரிவிற்கு நியமிப்பதற்கான பரீட்சை நவம்பர்மாதம் 20ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது

இப்பரீட்சையில் தோற்றவுள்ளோர் செப்ரெம்பர் 10ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலம் 'பரீட்சை ஆணையாளர், கொழும்பு -2' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இப்பரீட்சை கடந்த வருடம் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

மேலதிக விபரங்களுக்கு கடந்த மாதம் 23ஆம்திகதியவர்த்தமானிபத்திரிகையை பார்க்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. [தி] (பா)

## யாழ். மாவட்டத்தில் பரீட்சை நடத்துக

அரசாங்க, மாகாண அரசாங்க சேவையில் பொது எழுதுனர் சேவையின் இரண்டாம் தரம் "அ" பிரிவில் உள்ள உத்தியோகஸ்தர்களுக்கான வினைத்திறமைக்காண்தடைப் பரீட்சையை யாழ். மாவட்டத்தில் நடாத்துமாறு யாழ். அரச அதிபரையும், யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளரையும் மேற்படி பரீட்சார்த்திகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மேற்படி பரீட்சை கொழும்பில் மட்டும் எதிர்வரும் மாதம் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது என பரீட்சை ஆணையாளர் அறிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு பயணம் செய்வதில் தற்போதுள்ள கஷ்ட நிலையை முன்னிட்டு மேற்படி வேண்டுகோளை பரீட்சார்த்திகள் முன்வைத்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டது. [பா],[தி]

## 50 தபால் பொதிகள் கொழும்பு சென்றன

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதம தபாலகத்திலிருந்து கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்படுவதற்காக நேற்று பருத்தித்துறை தபாலகத்திற்கு சுமார் ஐம்பது தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்பட்டன.

மேலும் வடமராட்சிப் பகுதியில் உள்ள பொதிகளையும் சேர்த்து வாதுவ கப்பலில் கொழும்பு தபாற் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படும்.

இதேசமயம் குமாரி கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் நேற்று ஆரம்பமாயின. (தி), (பா)

## சுவர் இடிந்து வீழ்ந்து இளைஞர் மரணம்

(வடமராட்சி)

கட்டட இடிபாடுகளுக்குள் சிக்குண்டு குடல் வெளிவந்த நிலையில் பலத்த காயங்களுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் மரணமானார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை பருத்தித்துறை பழைய நீதிமன்றக் கட்டடப் பகுதிகளை இடித்து துப்புரவு செய்து கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக நடைபெற்றது.

வல்வெட்டித்துறை சமரபாகுவைச் சேர்ந்த வடிவேலு அழகேஸ்வரன் (வயது 19) என்ற இளைஞரே இவ்வாறு மரணமானவராவர். (யோ)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 08-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10558

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:

## உதவிப் பண கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

புற்றுநோய், தொழுநோய், காசநோய் என்பனவற்றி

## வீரவணக்க கூட்டம்

(அரியாலை)

7ஆம், 8ஆம் மாதங்களில் வீரச்சாவடைந்த வலிகாமம் கோட்டத்தின் நல்லூர் வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 7-30 மணிக்கு கொக்குவில்மஞ்சவனப்பதி முருகன் ஆலயம் முன்றலில் நடைபெறும். இவ் வீரவணக்கக் கூட்டத்தில், விடுதலைப்புலிகள் உறுப்பினர்களின் உரைகளைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

## 3000 பீப்பா மண்ணெண்ணெய் றுகுணுவில் வரும்

இன்னும் சில தினங்களில் பருத்தித்துறைதுறைமுகத்தை வந்தடையவுள்ள றுகுணு கப்பலில் தனியாருக்கென மூவாயிரம் பீப்பா மண்ணெண்ணெய் ஏற்றிவரப்படும் என யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே தனியாருக்கென வாதுவ கப்பலில் 500 பீப்பா மண்ணெண்ணெய் ஏற்றிவரப்பட்டமை தெரிந்ததே.

இதேசமயம் யாழ் செயலகத்திற்கு மண்ணெண்ணெய் அனுப்பி வைக்கும் வேலை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டமை அறிந்ததே.

தனியாருக்குவந்துசேரவுள்ள மண்ணெண்ணெய் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யக் கோருவதற்கான தீர்மானம் விரைவில் எடுக்கப்படவுள்ளது.

இதன் மூலம் யாழ். குடாநாட்டில் மண்ணெண்ணெயின் விலை வீழ்ச்சியடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (தி),(பா)

## கிளாலியில் கைதாகிய ஐவரின் விபரம்

(குருநகர்)

கிளாலிக் கடற்பரப்பில் கடந்த மாதம் 29 ஆம் திகதி சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்கான இரு படகுகளின் ஓட்டிகளான நால்வரும் பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக உறவினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் பருத்தித்துறை வாசி ஒருவரும் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

குருநகரைச் சேர்ந்த சிறில்சூரி (வயது 26) மற்றும் மண்டைதீவைச் சேர்ந்தவரும் தற்பொழுது குருநகரை வதிவிடமாகக் கொண்ட சந்தியாப்பிள்ளை றோபேட் (வயது 26), மடு அகதி முகாமில் வசித்த மண்டைதீவு வாசிகளான ஆரோக்கியநாதர் இன்பம் (வயது 20), செல்லத்தம்பி நேசன் (வயது 20) ஆகியோரே பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களாவர்.

மேலும் பருத்தித்துறை தும்பளை வீதியைச் சேர்ந்த சிவஞானசுந்தரம் என்பவரும் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். [21], [யோ]

## இன்று விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பிரதான தபாலகத்திற்கு நேற்று எடுத்துவரப்பட்ட சுமார் 96 தபால் பொதிகளும் இன்று உடன்தரம் பிரிக்கப்பட்டு இன்றே விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ். பிரதான தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

# தி.மு.கவை பிளவுபடுத்த மத்திய உளவுப்பிரிவு சதி

(சென்னை)

தி.மு கவை பிளவுபடுத்த மத்திய மற்றும் மாநில புலனாய்வு நிறுவனங்கள் அக்கறை கொண்டு செயற்படுகின்றன. இந்த புலனாய்வு சேவைகளின் கையாட்கள் தி.மு.கவினுள் இருக்கின்றனர். அவர்கள் விரைவில் அம்பலப்படுத்தப்படுவர் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி பத்திரிகையாளரிடையே அண்மையில் பேசும்போது தெரிவித்தார்.

நரசிம்மராவ் அரசுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரிப்பதற்கு அ.தி.மு.க எடுத்திருந்த முடிவை பாரதீய ஜனதா வரவேற்றமை எனக்கு எவ்விதத்திலும் ஆச்சரியத்தை தரவில்லை.

மத்திய அரசாங்கமே இன்று நெருக்கடியில் சிக்கியிருப்பதால் அது ஜெயலலிதாவுக்கு எதிராக இப்போதைக்கு எதையும் செய்யும் சாத்தியமில்லை என்றே கருதுகிறேன். நரசிம்மராவிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையின் விளைவு எதுவாக இருந்த போதும் இன்னும் ஒரு வருடத்திற்குள் பொதுத்தேர்தல் வருவது நிச்சயம் என்றும் கருணாநிதி குறிப்பிட்டார்.

தி.மு.கவை நசுக்குவதற்கான காங்கிரசின் சதித்திட்டத்தில் பத்திரிகைகளுக்கும் பங்கு இருக்கின்றது.

தி.மு.க குடும்பச் சொத்தாக மாறிவிட்டது என கண்டனங்கள் தெரிவிக்கப்படுகின்றன. எனது குடும்பத்தைவிட கட்சியை நான் கூடுதலான பாசத்துடன் கட்டிக்காத்து வருகிறேன். எனது மகன் மாறின் பெயரைக்கூறி கட்சியை நிர்மூலம் செய்யும் எந்த முயற்சியும் பலனளிக்காது. நான் தி.மு.கவின் தலைவராக இன்னொரு மூன்று வருடகாலத்திற்கு கழக உறுப்பினர்களால் தெரிவாகியுள்ள வேளையில் இப்போது எதற்காக எனக்குப்பின்கழகத்திற்கு தலைமை தாங்குபவர் யார் என்ற கேள்வி எழுந்ததோ எனக்கு தெரியவில்லை. நான் விரைவில் சாகப்போகிறேன் என்று எவராவது எதிர்பார்க்கிறார்களோ தெரியவில்லை. அவ்வாறானால் கழக செயலாளர் பேராசிரியர் அன்பழகன் என்னுடன் உடன் கட்டையாஏறப்போகிறார்?

கழகத்தை குடும்பச்சொத்து என வர்ணிக்கும் பத்திரிகைகளினதும் சஞ்சிகைகளினதும் ஆசிரியர்கள் தங்கள் தந்தைமாருக்குப்பின்னரே அப்பதவிகளை ஏற்றனர் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். எனக்குப்பின் கழகத்தின் தலைமைப் பதவியில் எனது மகன்மாரை அமர்த்த நான் ஒன்றும் சர்வதிகாரியல்ல. அவ்வாறு செய்வேனானால் அது ஜனநாயகத்திற்கு முரணானது நாட்டிலுள்ள சகல கட்சிகளையும் விட தி.மு.க ஜனநாயக தன்மை கொண்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கடிதங்கள் தாமதத்தால் பொதுமக்கள் சிரமம்

காலம் கடந்து வந்துகிடைத்த கடிதங்களால் பலர் நேர்முகப் பரீட்சைகளுக்குத் தோற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் வாதுவ கப்பலில் அனுப்பிவைக்கப்பட்ட தபால் பொதிகளில் கடந்த மார்ச் மாதமளவில் கொழும்பில் இடப்பட்ட தபால்களும் வந்துள்ளதாக தெரியவருகிறது.

மார்ச் மாதம் உறவினர்களாலும், அரச அதிகாரிகளினாலும் நேர்முகப் பரீட்சைகள், கூட்டங்கள் மற்றும் மாநாடுகளுக்கான அழைப்புகள் விடுக்கப்பட்டு தபாலில் சேர்க்கப்பட்டவை இதுவரை காலமும் கொழும்பு துறைமுகத்தில் தேங்கிக்கிடந்தபின் "வாதுவ" மூலம் யாழ். பிரதம தபாலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இக்கடிதங்களே தற்போது யாழ். தபாலகத்தால் விநியோகிக்கப்படுகிறது. இதனால் பலர் தமக்குரிய பல சந்தர்ப்பங்களை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகியுள்ளனர்.

## தாயின் மரணச் செய்தி 2மாதங்களின்பின் கிட்டியது

(வடமராட்சி)

ஊரிகாவற்றுறையில் சிறிலங்கா இராணுவத்தின் பிடியில் சிக்கியிருந்த வயோதிப மாது ஒருவரின் மரணச்செய்தி இரண்டு மாதத்தின் பின்னரே அவரது மகனுக்கு கிடைத்திருக்கிறது.

அ. செல்லம்மா (வயது 77) என்பவர் ஆனி மாதம் நோயினால் இறந்ததாகவும் இவ்விபரம் புலோலியில் உள்ள அவரது மகனுக்கு நேற்று தெரிவிக்கப்பட்டது. (யோ)

## கொழும்பு-வவுனியா ரயில்; பிரயாணிகளிடம் கொள்ளை

(வவுனியா)

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி வந்த புகையிரதத்தில்

ரூபா பணம் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

## விடுதலைப்புலிகள்

ளர், கொழும்பு -2' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இப்பரீட்சை கடந்த வருடம் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

மேலதிக விபரங்களுக்கு கடந்த மாதம் 23ஆம்திகதியவர்த்தமானிபத்திரிகையை பார்க்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. [தி] (பா)

# சுவர் இடிந்து வீழ்ந்து இளைஞர் மரணம்

(வடமராட்சி)

கட்டட இடிபாடுகளுக்குள் சிக்குண்டு குடல் வெளிவந்த நிலையில் பலத்த காயங்களுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் மரணமானார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை பருத்தித்துறை பழைய நீதிமன்றக் கட்டடப் பகுதிகளை இடித்து துப்புரவு செய்து கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக நடைபெற்றது.

வல்வெட்டித்துறை சமரபாகுவைச் சேர்ந்த வடிவேலு அழகேஸ்வரன் (வயது 19) என்ற இளைஞரே இவ்வாறு மரணமானவராவர். (யோ)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 08-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10558

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:

27-9649.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-1285, 24-5818, 27-4024, 26-4727, 24-7560
24-3594, 24-1207, 24-1250, 24-5140, 26-0691.

## "நல்லைக் குமரன் மலர்" வெளிவந்துவிட்டது

164 பக்கம்-விலை ரூபா 125/-

கிடைக்குமிடங்கள்;-

1. நல்லூர் ஆலயப் பகுதியில் அமைந்துள்ள மாநகரசபை செயலகங்கள், கண்காட்சிக் கூடங்கள்.
2. 228, பிரதான வீதியில் உள்ள புற்றுநோய்சங்க பணிமனை.
3. கச்சேரியடியில் உள்ள சுகாதாரப் பணிமனையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(சி/7166)

## நன்றி நவில்கின்றோம்

07-08-1993 மாலை நடந்தேறிய எமது கலை நிகழ்ச்சிக்கு நிதிஉதவிகள் புரிந்தும், பத்திரிகை விளம்பரங்கள் கொடுத்தும், தங்கப்பதக்கங்கள் கொடுத்தும், உரையாற்றியும் எமது கலை நிகழ்ச்சிகளை சிறப்பித்தவர்களாகிய சகல வர்த்தக ஸ்தாபனங்கள், சங்கங்கள், சமாசம், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அரசியல்துறை, தொழிற்துறை, காவல்துறை, கலை பண்பாட்டுக்கழகம் ஆகியோருக்கும் தொண்டர்படை (ஊர்காவற்துறைப்பிரிவு) யாழ்.மாநகர சபைஆணையாளர் மேக்கன்ரையில் பாதுகாப்புச்சேவை சகல இசைக் கலைஞர்கள் எல்லோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை சங்கத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

யாழ். வர்த்தகர் சங்கம்
2/1 நவீன சந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம்.

(5648)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


## உதவிப் பண கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

புற்றுநோய், தொழுநோய், காசநோய் என்பனவற்றிற்கான உதவிப் பணம், வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்டவர்களுக்கு வழங்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

இக் கொடுப்பனவை புங்குடுதீவு, வேலணை ஆகியவற்றிற்கான யாழ் நகரப் பகுதியில் செயல்படும் தபாலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (தி, பா)

## உணவு முத்திரை விநியோகம்

யாழ்ப்பாணம்]

இடம்பெயர்ந்தவர்களுக்கான இலவச நிவாரணஉணவு முத்திரைகள் புதன்கிழமை தொடக்கம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் கிராமசேவை உத்தியோகத்தர்கள் ஊடாக இந்த முத்திரைகள் வழங்கப்படும்.

இடம் பெயர்ந்த மக்கள் ஜூலை மாதத்திற்குரிய முத்திரையைச் சமர்ப்பித்து அம் மாதத்திற்குரிய நான்கு கட்ட உணவுப்பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [தி] [பா]

### சாம்பல்தீவு

பகுதியைச் சுற்றிவளைத்த அதிரடிப் படையினர் சாம்பல் தீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தாயாரான பிள்ளை ராணி இராமநாதன் (வயது 32), இரண்டு பிள்ளைகளின் தாயாரான சூரியகலா வில்வராஜா (வயது 29), மற்றும் ஆசிரியையான திருக்கோணமலை அன்பு வழிபுரத்தைச் சேர்ந்த கோணேஸ்வரி நாகராஜா (வயது 31) ஆகியோரைக் கைது செய்து வெள்ளை வான் ஒன்றில் ஏற்றி முகாமுக்குக் கொண்டுசென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

உறவினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் பருத்தித்துறை வாசி ஒருவரும் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

குருநகரைச் சேர்ந்த சிறில் சூரி (வயது 26) மற்றும் மண்டைதீவைச் சேர்ந்தவரும் தற்பொழுது குருநகரை வதிவிடமாகக் கொண்ட சந்தியாப்பிள்ளை றோபேட் ஞானசுந்தரம் என்பவரும் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். [21], [யோ]

## இன்று விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பிரதான தபாலகத்திற்கு நேற்று எடுத்துவரப்பட்ட சுமார் 96 தபால் பொதிகளும் இன்று உடன்தரம் பிரிக்கப்பட்டு இன்றே விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ். பிரதான தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

### சட்டத்தரணி

அனைவரும் பதிவு செய்து கொள்வதற்காக எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை காலை பத்துமணியளவில் கோண்டாவில் நடுவப் பணியகத்தில் தவறாது சமுகமளிக்கும்படி தமிழீழ நீதி நிர்வாகத் துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### ஐ. நா.

படைகளை அனுப்பி யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு தமிழர் பிரதேசத்தில் சுதந்திரமான தேர்தல் நடைபெறவேண்டும் எனவும், அதனை ஐ. நா. படைகள் கண்காணிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இத் திட்டத்தை தயாரித்த நால்வரும் இலங்கை வந்து சிறிலங்கா அரசாங்கத்துடனும், விடுதலைப் புலிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தவும் அனுமதியும் கோரியிருந்தனர்.

இத் தீர்வுத்திட்டமே தற்பொழுது விடுதலைப்புலிகளுக்கு ஆதரவானதெனத் தெரிவித்து சிறிலங்கா அரசாங்கம் நிராகரித்துள்ளது. இது குறித்து கருத்து வெளியிட்ட சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, இனப்பிரச்சினைக்கு ஐ. நா. வின் உதவி தேவையே ஒழிய மத்தியஸ்தம் தேவையில்லை எனத் தெரிவித்தார். மேலும் இனப்பிரச்சினையில் வெளித் தலையீடு எதற்கும் அவசியமில்லை எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, மலேசிய செய்தி நிறுவனம் ஒன்றிற்குப் பேட்டி அளித்த சிறிலங்கா ஜனாதிபதி இனப்பிரச்சினை தீர்விற்கு வெளிநாட்டு உதவி கோரப்போவதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பட்டுள்ளது.

கடந்த வாரம் வாதுவ கப்பலில் அனுப்பிவைக்கப்பட்ட

## தாயின் மரணச் செய்தி 2மாதங்களின்பின் கிட்டியது

(வடமராட்சி)

ஊர்காவற்றுறையில் சிறிலங்கா இராணுவத்தின் பிடியில் சிக்கியிருந்த வயோதிபமாது ஒருவரின் மரணச்செய்தி இரண்டு மாதத்தின் பின்னரே அவரது மகனுக்கு கிடைத்திருக்கிறது.

அ. செல்லம்மா (வயது 77) என்பவர் ஆனி மாதம் நோயினால் இறந்ததாகவும் இவ் விபரம் புலோலியில் உள்ள அவரது மகனுக்கு நேற்று தெரிவிக்கப்பட்டது. (யோ)

## கொழும்பு-வவுனியா ரயில்; பிரயாணிகளிடம் கொள்ளை

(வவுனியா)

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி வந்த புகையிரதத்தில் ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்று பணம் உட்பட ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

ஆயுதம் தாங்கிய 5 தமிழ் இளைஞர்கள் பருத்திப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த த. வைத்தியநாதக் குருக்கள் என்பவரிடமிருந்து பத்துப் பவுண் தங்கநகைகள், 25 000 ரூபா பணம் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இச் சம்பவம் கொல்கொல்லப் பகுதியில் இடம்பெற்றது.

### அலுவலர்

செயலகம் இன்றிலிருந்து பயண அனுமதி பெற வரும் அலுவலர்களின் நன்மைகருதியும் போக்குவரத்து வசதி கருதியும் அருச்சுனா வீதியில் (யாழ். மத்திய பஸ் நிலையத்திற்கு) அருகாமையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினர் பொது மக்களிற்கு அறியத்தருகின்றனர்:

### விடுவிக்கப்படா

தக்கைதிகள் ஒவ்வொருவரும் சோர்வடைந்த நிலையில் காணப்படுகின்றனர். உடல் உறுப்புக்களில் கடுமையான வலி தோன்றியிருப்பதாக சிலர் கூறினார்கள், வேறு சிலர் தமது உடல் மூட்டுக்கள், வயிற்றின் உட்பகுதிகளில் நோவு ஏற்பட்டுள்ளது என்றனர்.

இவ்வாறான உடல் வியாதிகளுடன் தாம் உறுதியுடன் உண்ணாவிரதமிருந்து வருவதாகவும் கூறினர். இவ்வாறு தமது போராட்டத்துக்கு அரசு மதிப்பளித்து தம்மை விடுவிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளாவிட்டால் தாங்கள் அனைவரும் மீட்சியடைய முடியாத கடும் நோயாளியாக மாறுவதைத் தவிர்க்க முடியாமற் போய்விடும் என்றும் கைதிகள் பலர் கவலை தெரிவித்தனர்.

## பொருள்கள் இறக்குதல் ஆரம்பம்

(நெல்லியடி)

பருத்தித்துறை வந்தடைந்த குமாரி கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலை உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டது. இக்கப்பலில் 1450 மெ. தொன் அரிசி, 787 மெ. தொன் சீனி 185 மெ. தொன் பருப்பு. 55 மெ. தொன் கடலை மற்றும் யாழ் சமநல சேவை திணைக்களத்திற்கு 50 சைக்கிள்கள் என்பன வந்துள்ளன (30)

றது.

மார்ச் மாதம் உறவினர்களாலும், அரச அதிகாரிகளினாலும் நேர்முகப் பரீட்சைகள், கூட்டங்கள் மற்றும் மாநாடுகளுக்கான அழைப்புகள் விடுக்கப்பட்டு தபாலில் சேர்க்கப்பட்டவை இதுவரை காலமும் கொழும்பு துறைமுகத்தில் தேங்கிக்கிடந்தபின் ''வாதுவ'' மூலம் யாழ். பிரதம தபாலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இக்கடிதங்களே தற்போது யாழ். தபாலகத்தால் விநியோகிக்கப்படுகிறது. இதனால் பலர் தமக்குரிய பல சந்தர்ப்பங்களை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகியுள்ளனர்.

### விடுதலைப்புலிகள்

கருத்துரை இடம்பெற்றுள்ளது.

மேலும் ''தமிழீழ நீதிமன்றம் - ஓர் அறிமுகம்'', ''மூன்றாண்டுப் போர்; வெற்றி யார் பக்கம்?'', ''அழிப்பு நடவடிக்கை யூலை 83'' ஆகிய கட்டுரைகளும், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் அவர்களுடனான செவ்வி, லெப்டினன்ட் கேணல் சாள்ஸ் என்ற போராளியின் குருதிச்சுவடு, புதுவை இரத்தினதுரை அவர்கள் எழுதிய 'பள்ளிக்குப் போன பிள்ளை ஏன் வரவில்லை?' என்ற ஒரு கவிதை ஆகியவற்றுடன் மேலும் பல அம்சங்கள் இவ் இதழில் இடம்பெற்றுள்ளன.


## மரண அறிவித்தல்

### கனகரத்தினம் செல்லக்கண்டு

கட்டுடையைச் சேர்ந்த திருமதி க. செல்லக்கண்டு 8-8-1993 ஞாயிற்றுக்கிழமை நேற்று காலமானார். இவர் காலஞ்சென்ற புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த இளைப்பாறிய P.W.D ஓவசியர் கனகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கனகராஜா, காலஞ்சென்ற திரவியராஜா, ஜெயராஜா (கிறவுண்ஸ்) செல்வராணி விமலராஜா, விவேகானந்தராஜா (சவுதி), மனோரஞ்சிதராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சொர்ணகாந்தி சரஸ்வதி, ஞானபண்டிதர் (இளைப்பாறிய இராணுவ உத்தியோகத்தர்) திலகவதி, சர்வானந்தன் (வீதி அபிவிருத்திசபை திணைக்கள ஒப்பந்தகாரர்) ஆகியோரின் மாமியாரும், காந்தருபன், காந்திமதி உமாசுதன், உமாசங்கர், உமாகாந்தன் உமாகரன், செல்வஜீவன், ஞானறதி, விஜிதா, வைதேகி, பிரதீபன், சுமதினி மகிழினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-8-1993 செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு அன்னாரது கட்டுடை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
ஜெயராஜா
(மகன்)

கட்டுடை,
மானிப்பாய் (5649)